செ.வெ.எண்.53/ ஆகஸ்ட்                                                                                    நாள் : 27.08.2018

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் நடத்தப்படும் விநாயகர் சதுர்த்தி திருவிழாவிற்கு தற்காலிகமாக விநாயகர் சிலைகள் வைக்க முன் அனுமதி பெறுதல், சிலைகள் கொண்டு செல்லப்படும் வழி மற்றும் சிலைகளை பாதுகாப்பாக நீர்நிலைகளில் கரைப்பது உள்ளிட்ட நிகழ்வுகளில் பொதுமக்கள் கீழ்கண்ட வழிமுறைகள் கடைபிடிக்க வேண்டுகோள் விடப்படுகிறது.

1. களிமண்ணால் செய்யப்பட்ட சிலைகள் (சுடப்பட்டது மற்றும் சுடப்பாடாதது) மட்டுமே வழிபாட்டிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். அத்தகைய சிலைகள் மட்டுமே நீர் நிலைகளில் கரைக்கலாம்.

2. இராசயனக் கலவையற்ற (Plaster of Paris /Gypsum-அல்லாத) சிலைகள் மட்டுமே வழிபாட்டிற்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

3. வர்ணப் பூச்சுகள் (Paint) பூசப்பட்ட சிலைகள் நீர் நிலைகளில் கரைக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

4. தருமபுரி மாவட்டத்தில் சிலைகள் கரைப்பதற்கென கீழ்க்கண்ட 6 நீர் நிலைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்கு மட்டும் சிலைகள் கரைக்க குறிப்பிட்ட அனுமதிக்கப்பட்ட நேரங்களில் மட்டும் அனுமதி வழங்கப்படும்.

   1.வாணியார் அணை.
   2.வரட்டாறு அணை.
   3.ஈச்சம்பாடி அணை.
   4.கேசர்குழி அணை.
   5.தென்பெண்ணையாறு.
   6.ஒகேனக்கல்(காவிரி)

- விநாயகர் சதுர்த்தி பண்டிகைக்கு விநாயகர் சிலைகள் வைக்க விரும்பும் நபர்கள் சம்மந்தப்பட்ட வருவாய் கோட்ட அலுவலரிடம் எழுத்து மூலமாக அதற்கென அரசால் வடிவமைக்கப்பட்டுள்ள படிவத்தில் **(படிவம்-I)** ஒரு மாதத்திற்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும்.
- சிலை வைக்குமிடம் தனியார் பட்டா நிலமாக இருந்தால் நில உரிமையாளரிடமிருந்தும், அரசு நிலமாக இருந்தால் சம்மந்தப்பட்ட உள்ளாட்சித்துறையிடமிருந்தும், நெடுஞ்சாலைதுறை நிலமாக இருந்தால் நெடுஞ்சாலைதுறையிடமிருந்தும் தடையின்மைச்சான்று பெற்று விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

- சம்மந்தப்பட்ட காவல்நிலைய அலுவலரின் தடையின்மை சான்று (Including sound amplifier Licence/Permit).
- தீயணைப்பு மற்றும் மீட்டுப்பணித்துறையின் தடையின்மைச் சான்று மற்றும்
- சிலை வைக்கப்படும் இடத்திற்கு எவ்வாறு மின்இணைப்பு பெறப்பட்டுள்ளது என்ற விவரம் அடங்கிய கடிதம் (மின் பகிர்மான கழகத்தால் தற்காக மின்னினைப்பு வழங்கப்பட்டிருந்தால் அதற்கான விவரம்).
- விநாயகர் சிலை வைக்க அனுமதி கோருபவர்கள், சிலை வைக்கப்படும் இடத்தில் 24 மணி நேரமும் சிலையை பாதுகாக்க உரிய நபர்களை சுழற்சி முறையில் பணியமர்த்தி பாதுகாப்பாக இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பாரம்பரிய வழக்கப்படி சுற்றுச் சூழலை பாதிக்காமலும், நீர்நிலைகளை மாசுபடுத்தாமலும், விநாயகர் சதுர்த்தியைக் கொண்டாடும்படியும், மாவட்ட நிர்வாகத்திற்கு தக்க ஒத்துழைப்பு நல்குமாறும் பொதுமக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**